//நினைவூட்டு -4//
// மிக மிக அவசரம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2145/ஆ5/2023, நாள். 23.08.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி - தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் - புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) 2023-2024ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் இணையதள மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது - இது நாள் வரை விண்ணப்பிக்காத பள்ளித் தலைமையாசிரியர்கள் இணையதள மூலம் உடன் விண்ணப்பிக்க தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை
1. சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடித எண். 2226/P1/2023, நாள்.22.05.2023 , 23.06.2023, 14.07.2023, 31.07.2023 மற்றும் 21.08.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 24.05.2023 03.07.2023, 18.07.2023 மற்றும் 02.08.2023

•••••

2023-2024ம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான (Inspire Award) புதிய பதிவுகள் மே 1ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக அனைத்துப் பள்ளிகளில் **6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்** பதிவு செய்ய வேண்டும் எனவும், இதற்காக www.inspireawards-dt.gov.in என்ற இணையதளம் 2023 மே 1-ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 31-ம் தேதி வரை செயல்படும் என 22.05.2023 நாளிட்ட பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இப்பொருள் சார்பாக பார்வையில் 2-ல் காணும் இவ்வலுவலக கடிதங்கள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

எனவே, இதற்கான பதிவுகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், தெரிந்து கொள்ளவும், பதிவு செய்யவும் இணையதள முகவரி

www.inspireawards-dst.gov.in

**பதிவு செய்வதற்கான கடைசி நாள். 31.08.2023**

21.08.2023 அன்றைய நிலவரப்படி வேலூர் மாவட்டத்தில் மிக குறைந்த அளவில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என பார்வை 1-ல் காணும் சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநரின் 21.08.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதுநாள் வரை விண்ணப்பிக்காத பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பணிபுரியும் அறிவியல் பாட ஆசிரியர்கள் மூலமாக பள்ளிக்கு 5 மாணவர்கள் வீதம் தவறாமல் உடனடியாக மேற்காணும் இணையதளத்தில் பதிவுகள் மேற்கொள்ள அனைத்து அரசு / நிதியுதவி/ மெட்ரிக்/ மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. ஆகஸ்ட் 31 வரை விண்ணப்பங்களை இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மீள தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
தலைமை ஆசிரியர்கள் / தாளாளர்கள்/ முதல்வர்கள்,
அரசு / நிதியுதவி/ மெட்ரிக்/ மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப்பள்ளிகள்
வேலூர் மாவட்டம்

**நகல்**

1. செயல் இயக்குநர் (முகூபொ) ,
   தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்,
   சென்னை – 600 025.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் /தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
   (அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் சார்பாக பதிவுகள் மிக மிக குறைவாக உள்ளது. இப்பொருள் சார்பாக தனிகவனம் செலுத்தி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)